



Signature Not Verified
Signed by Assistant Director
Location:Erode
Date:2024.01.04 18:38:58

| | |
|---|---|
| அளவர் / உதவி வரைவாளர் | து.கனகராஜ் |
| வரைவாளர் நிலை- III | கா.வேல்முருகன் |
| மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-II | கோ.கண்ணன் |

# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்
## மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்
## முத்துக்கவுண்டம்பாளையம் ஊராட்சி

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், முத்துக்கவுண்டம் பாளையம் ஊராட்சி மற்றும் நஞ்சை ஊத்துக்குளி "அ" கிராமம் ரீ.ச. எண். 72/1B-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

அளவு : 1 : 400

இணையதள விண்ணப்ப எண் : ANNJ6IU0 நாள்:26/11/2023

**குறிப்பு :**

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பளவு | : 1.60 ஏக்கர் (அ) 6476.00 ச.மீ |
| கோரிய மனைகள் | : 27 மனைகள் |
| ஒதுக்கப்பட்ட மனைகள் | : 27 மனைகள் |
| மனைப்பிரிவு எல்லை | |
| நிலையில் உள்ள சாலை | |

**பொது ஒதுக்கீடு :**

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை: (தான ஆவண எண்: 10468/2023, நாள்: 28.12.2023)

| | |
|---|---|
| மனைப்பிரிவு சாலை | : 1807.76 ச.மீ |
| தேவையான பூங்கா | : (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பளவு -மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x 10% |
| | : (6476.00-1807.76) x 10% = 466.82ச.மீ |
| பூங்கா பரப்பு | : 466.82ச.மீ (10%) |
| | (மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது) |
| பொது உபயோகம் தேவையான பரப்பு | : (மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு) x 0.5% |
| | : (6476.00-1807.76) x 0.5% = 23.34 ச.மீ |
| பொது உபயோகம் A | : 36.60 ச.மீ (0.78%) |

மின்பகிர்மான கழகத்திற்காக - TANGEDCO-க்கு (அல்லது) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:
(தான ஆவண எண்: 10467/2023, நாள்: 28.12.2023)

| | |
|---|---|
| பொது உபயோகம் B | : 36.60 ச.மீ (0.78%) |

கட்டிட வரம்பு : 9.0மீ வரை அகல சாலைக்கு 1.50மீ விடப்படல் வேண்டும்
: 9.0மீ மேல் 12.0மீ வரை உள்ள சாலைக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்
மூலை முடக்கு : 7.20மீ முதல் 12.0மீ வரை அகலம் உள்ள சாலைக்கு 1.50மீ x1.50மீ விடப்படல் வேண்டும்
:12.00மீ மேல் 30.5மீ வரை அகலம் உள்ள சாலைக்கு 4.50மீ x4.50மீ விடப்படல் வேண்டும்

**நிபந்தனைகள் :**

1. அரசாணை எண் 18 ந.நி(ம)கு.வ. துறை (MA-1) நாள்: 04.02.2019, அரசாணை எண் 16 ந.நி(ம)கு.வ. துறை (MA-1) நாள்: 31.01.2020 - ஆகியவற்றின்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பொது உபயோகம் (A) உள்ளாட்சிக்கும் மற்றும் பொது உபயோகம் (B) பரப்பினை TANGEDCO - ற்கும் தானமாகப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 181 வீ.வ (ம) ந.வ.து நாள்: 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண் 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை நாள்:16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நிலஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத்துறைக்காகவும் நிலஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் தலைவர், படவல்கால்வாய் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்மின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. மனைப்பிரிவின் உள்ளே செல்லும் குறைந்த மின்னழுத்தப் பாதை சாலையின் போக்கிற்கேற்ப மனுதாரரால் மாற்றி அமைக்கப்படவேண்டும்.
9. பிரஸ்தாப மனைப்பரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. மனுதாரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
10. பிரஸ்தாப மனைப்பரிவு அமையும் இடம் குறித்து நீதி மன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.
11. மனைப்பிரிவினை சுற்றி சுற்றுசுவர் (COMPOUND WALL) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுசுவர் இடித்து அப்புறப்படுத்தப்படவேண்டும்.

SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL No : 07/2024

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.